# யாதுமாகி...

ஆளுமையின் ஓர் அங்கம்

*முதுகலை & தமிழாய்வுத்துறையின் மாதாந்திர மின்னிதழ்*

மலர் – 01 இதழ் – 05 திசம்பர் – 2023

திருவள்ளுவர் ஆண்டு

2054 (கார்த்திகை – மார்கழி)



## முதுகலைத் தமிழாய்வுத்துறை

## ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

தேசியத் தர மதிப்பீட்டு நான்காம் சுற்றில் '$A^{++}$' அங்கீகாரம் பெற்றது (CGPA 4-க்கு 3.69)

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

திருச்சிராப்பள்ளி – 620020

தமிழ்நாடு, இந்தியா

| | | |
|---|---|---|
| இதழ் | : | **யாதுமாகி** |
| முதன்மையாசிரியர் | : | முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,<br>தேர்வு நெறியாளர்,<br>இணைப்பேராசிரியர் & தமிழாய்வுத்துறைத் தலைவர். |
| இணை ஆசிரியர் | : | முனைவர் வ.முஹம்மது யூனுஸ், இணைப்பேராசிரியர் |
| துணை ஆசிரியர் | : | திரு. க.இம்தாதுல்லாஹ், இணைப்பேராசிரியர் |
| பொறுப்பாசிரியர் | : | **திரு. வீ.விஜய்**<br>உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை. |
| பிரதி | : | மின்னிதழ் |
| வெளியீடு | : | **திசம்பர் – 2023** |


---


**இதழாசிரியர் குழு**

*முனைவர் த.செல்வராசு*
*முனைவர் ஷே.நாகூர்கனி*
*திரு. கா.முகமது இஸ்மாயில்*
*முனைவர் மு.சாதிக்பாட்சா*
*முனைவர் அ.தௌஃபீக் ரமீஸ்*
*முனைவர் க.சிராஜுதீன்*
*முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு*
*முனைவர் க.இக்பால்*
*முனைவர் மு.ஹ.ஜஹானாரா*

**மாணவ ஒருங்கிணைப்பாளர்கள்**

*ப.அ.முஹம்மது ஆதில் முர்ஷித்*
*ஷா.முஹம்மது அஸ்ரின்*
*ஜோ.ஜார்ஜ் இம்மானுவேல்*
*பி.லீ.தயாநிதி*
*ஷா.முகமது அர்ஷத்*
*உ.பாபர் முகமது இஸ்மாயில் காஜா*
*ஜா. முகமது இலியாஸ்*
*மு.யாசர் அராபத்*
*மு.முகமது இமாதுதீன்*
*ரா.பிரீத்தி*
*ம.தாரணி*
*செ.ராகவி*


---

களிமண்ணாய்
கற்பூரமாய்
கார்மேகமாய்
கணக்கில் வைக்கும்
கனவான்
மத்தியில்
கடக்கும் காலத்தினும்
காலத்தைக்
கடத்தும்
களவாடிகள்.
பொன் போன்றதெனச்
சொல்லியே
சட்டை செய்யாமல்
சந்திக்க மறுப்போர்

களிமண்ணும் நாம்
கற்பூரமும் நாம்
கார்மேகமென
கடந்துவிடாது
காலத்தே
களிமண்
கலைச் செய்யும்
சிற்பியுமாகிட
"யாதுமாகி" நிற்கிறது
தமிழ்

– **வீ.விஜய்**
(பொறுப்பாசிரியர்)

## கிறிஸ்துமஸ் திருநாள்



பனி பொழியும் குளிர்ந்தநாள்
பணி ஒழியும் விடுப்புநாள்
ஏசு பிறந்த பொன்னாள்
தொப்பித் தாத்தா வரும் செந்நாள்
பரிசு கிடைக்கும் நன்நாள்
இனிப்பைச் சுவைக்கும் மகிழ்வானநாள்
மரமும் ஒளிரும் மின்னால்
அதுவே நம் கிறிஸ்துமஸ் திருநாள்.



வி. ஹரிஷ்ராஜ்,
முதுகலை முதலாமாண்டு.

## கிறிஸ்துமஸ் தாத்தா



வானில் நட்சத்திரம் உதிக்க
மாட்டுத் தொழுவத்தில்
மன்னவன் உதித்து
உலகினை மீட்க
ஒளியாய் பிறந்து
அன்பின் விதையை
அகிலத்தில் விதைத்து
அமைதியின் உருவாய்
அமைந்தார் கிறிஸ்து….
இனிப்புகளை
இனிய உறவுகளுக்கு வழங்கி
மகிழ்வுடன் மழலைக்குப்
பரிசுகள் வழங்கி.
சிவப்பு உடையை உடுத்தி
அன்புடன் அனைவரையும்
அழைக்கும் ஒரு உறவு
கிறிஸ்துமஸ் தாத்தா….



செ.ராகவி,
இளங்கலை முதலாமாண்டு.

## தோற்காதவர்...



அன்பெனும் பண்பினை
உலகோர்க்கு
தன் சிலுவையில்
அறையச் சொன்னவரே !!
பகைமையை தோற்கடிக்கத்தான்
வீழ்ந்த பெருமையே !!
விண்ணில் தெரிவது
நட்சத்திர வெளிச்சம் அல்ல!!
உன் ரத்த சரித்திரம்..
மண்ணில் பிறந்தாய்
மக்களோடு மக்களாய் வாழ்ந்தாய்!!
துரத்தப்பட்ட இடத்தில்
மீண்டும் எழுந்தாய்..
யுத்த களத்தை வென்றவன் நீ
துயரம் துடைப்பவனும் நீ
பாவங்களை
மன்னிப்பவன் நீ கிறிஸ்துவே நீ பிறந்தாய்!!
என்றுமே தோற்காதவன் தான் நீ...நீ..



ஜா. முகமது இலியாஸ்,
முதுகலை முதலாமாண்டு.

## ஒளியானவர்...



கருணையின் சிகரமாய்
கடவுளாய் பிறந்தவன்
கடவுளின் ஒளி!
வருந்தும் உள்ளங்களின்
வாழ்க்கை வழிகாட்டியாய்
வாழ்வு கொடுத்த ஒளி!
வாயில்தோறும்
மின்னொளியில்
ஒளிர்கின்ற நட்சத்திரத்தில்
வீடு தேடி வந்த ஒளி!
சுக்குநாறிப் புல்லில்
வளர்ந்து விட்ட குடிலில்
அவதரித்த புனித ஒளி!
கேட்டதும் கொடுத்து
தட்டியதும் திறந்து
தேடியே கண்ட ஒளி!
மானுடர்களை இரட்சிக்க
மாட்டுத் தொழுவத்திலே
புனியதனாய் பிறந்த ஒளி!
ஒளி தந்த வெளிச்சத்திலே
துயர் கொண்ட இருள் நீங்கி
வாழ்வை செழுமையாக்கிய ஒளி!



**க.கார்த்திக் குமார்,**
**முதுகலை முதலாமாண்டு.**

## தந்தைக்கு...



தன்னம்பிக்கையை எனக்குள் வளர்த்து
தாயினும் மேலாய் பாசத்தை தந்து
திகட்டும் அன்பை தினமும் பொழிந்து
தீராத காதலை திமிராக காட்டி
துணிவையும் துடிப்பையும்
துணையாய்க் கொண்டு
குடும்பத்தை நடத்தி
தூண்டுதலாய் இருந்து
தென்னைப் போல் என்னையும்
பெரிதாய் வளர்த்து
தேன் மொழிப் பகிர்ந்து
தைரியமாய் முடிவுகளை எடுக்கவும்
தொகையிலும் பகையிலும்
கவனங்களைச் செலுத்தி
தோழனுக்குத் தோழனாக
எனை இயக்கும் எல்லாம்
அப்பா...

**சே. ஜெரீனா பேகம்,**
**இளங்கலை முதலாமாண்டு.**

## தடம் மாறும் தலைமுறை

மாறுது மாறுது தலைமுறை மாறுது
பாட்டன் பூட்டன் வகுத்த
வரைமுறை மாறுது
மதுவால் மடிந்து மதியும் சாகுது
தலைமயிரும் வண்ணமாய் மாறுது
வாகனம் கூட பருந்தாய் பறக்குது
காலனும் கூட கைக்கூப்பி அழைக்குது
செல்ஃபி மோகமும் செல்களில் பரவிட
செத்து மடிந்து சிதைந்து தான் போகுது
பள்ளிப் பாடம் பாதியில் முடியுது



பெத்த மனமும் பித்தாய் மாறுது
தொலைபேசியால் உறவுகள்
தொலைந்து தான் போகுது
தடம் மாறி, தடுமாறி
தலைமுறை போகுது...



**ரா. பிரீத்தி,**
**இளங்கலை மூன்றாமாண்டு.**

### அம்மாவின் அன்பு – கவிதைத் திறனாய்வு

**உன் தாய் முத்தமிட்டு**
**மிச்சம் வைத்த**
**இடங்களைச் சொல்**
**நான் முத்தமிட**

பொதுவாகவே தாய் என்பவள் குழந்தைகளை மார்போடு அள்ளி அணைத்து, அரவணைத்து, மூச்சு முட்ட முத்தமிடுவாள்... இப்படி முத்தமிடும் போது அனைத்து இடங்களிலும் அவள் ஸ்பரிசம் பகிரப்படும்..

அப்படி ஏதேனும் இடங்களில் அவள் விட்டு வைத்தால் அதை எனக்குச் சொல். நான் முத்தமிட... என்று காதலன் கூறும் கவிதையில் இருந்து , தாயின் கட்டுக்கடங்கா அன்பும், தாய்ப்போல் நானும் உன்மீது அன்பு செலுத்துவேன் என்னும் பண்பும் இக்கவிதையில் புலப்படுகிறது...



**கமர்நாத்,**
**முதுகலை இரண்டாமாண்டு.**

### யார் இந்த சாண்டா கிளாஸ்?

*யார் இந்த சாண்டா கிளாஸ்?*



சாண்டா கிளாஸ் பொதுவாக,
வெள்ளை தாடி,
தலையில் குல்லா, சிவப்பு
கோட்டு,
வயிற்றில் தொப்பை,
தோலில் பை,
பையில் பரிசு...

மேற்கத்திய கலாச்சாரத்தில் தோன்றிய ஒரு பழம்பெரும் நபர் ஆவார்...

கிறிஸ்துமஸ் தினத்தன்று மாலை மற்றும் இரவு நேரங்களில் பரிசுகளை இவர் கொண்டு வருவதாக கூறப்படுகிறது...

அவர் வட துருவ பட்டறையில் பொம்மைகளை உருவாக்கும், குட்டிச் சாத்தான்களின் உதவியுடனும், குளிர்ந்த காற்றில், பனியில் சறுக்கி ஓடும் வண்டியை இழுக்கும் கலைமான்களின் உதவியுடனும் அவர் இதை செய்வார் என்று நம்பப்படுகிறது...

கிறிஸ்துமஸ் இலக்கியத்தில் "ஹோ, ஹோ, ஹோ!" என்று மொழிபெயர்க்கப்படும் ஆழ்ந்த, இதயப்பூர்வமான சிரிப்புடன் அவர் பிரபலமான தொடர்புடையவர்..

இந்த உருவம் 19 ஆம் நூற்றாண்டில் வட அமெரிக்காவில் உருவானது.

பாடல், வானொலி, தொலைக்காட்சி, குழந்தைகள் புத்தகங்கள், குடும்ப கிறிஸ்துமஸ் மரபுகள், திரைப்படங்கள் மற்றும் விளம்பரங்கள் மூலமாக பராமரிக்கப்பட்டு வலுப்படுத்தப்படுகிறது.

இது கற்பனையான ஆசையாக இருந்தாலும், அந்த தினத்தில் கிறிஸ்துமஸ் தாத்தா வேடம் பூண்டு அனைத்து குழந்தைகளுக்கும் சாக்லேட் கொடுத்து, குழந்தைகளை மகிழ்வித்து, மற்றவர்களை குழந்தையாக மாற்றும் ஒரு மாபெரும் திருநாளைக் கொண்டாடி மகிழ்வோம்.



**ஷா. முஹம்மது அர்ஷத்,**
**முதுகலை இரண்டாமாண்டு.**




தென்கச்சி கோ.சுவாமிநாதன் ஒருமுறைப் பேசும் போது, சிறுகதைகள் பலவிதமா இருக்கு. இப்பெல்லாம் அது ஒரு பக்கம் அரைப் பக்கம் கால் பக்கம்ன்னு சுருங்கிட்டுது. வரிக்கு வரி திருப்பத்தோட சில சிறுகதைகள் இருக்கு. “ஒருத்தன் 10 – வது மாடில சாரம் கட்டி வெள்ளை அடுச்சுட்டு இருந்தான். துரதிர்ஷ்ட வசமா கயிறு அறுந்து 10 – வது மாடில இருந்து கீழ விழுந்துட்டு இருக்கான். அதிர்ஷ்ட வசமா அந்த நேரம் பாத்து ஒரு வைக்கோல் வண்டி அந்த பக்கமா போச்சு. ஆனா துரதிர்ஷ்ட வசமா அதுக்கு நடுல ஒரு கடப்பாரை நீட்டிட்டு இருக்கு. ஆனா அதிர்ஷ்ட வசமா அவன் அந்த வண்டில விழுகல. ஆனா துரதிர்ஷ்ட வசமா கீழ விழுந்து செத்து போயிட்டான்” இப்படி தான் வாழ்க்கையும் நொடிக்கு நொடி திருப்பம்னு அதிர்ஷ்டமும் துரதிர்ஷ்டமும் திருப்பி திருப்பி வருது.



பி.லீ. தயாநிதி,
முதுகலை இரண்டாமாண்டு.

## சாகித்ய அகாடமி விருது 2023

1. சாகித்ய அகாடமி விருது 2023 - தேவிபாரதி
2. விருது நூல் - நீர்வழிப் படூஉம்
3. தேவிபாரதி இயற்பெயர் - ராஜசேகரன்
4. நூல் பின்னணி - குடி நாவிதரின் வாழ்க்கை
5. பரிசுத் தொகை - ரூ. 1 லட்சம் ரொக்கம்
6. விருது மொழிகள் - 24 மொழிகள்

**ப்ளீஸ் அப்டேட்**




## கிறிஸ்துமஸ் பரிசு




நேரம் ஒன்பது மணியை நெருங்கியும் வீட்டில் உள்ள மேரி, ஜான், ஜார்ஜ் என்ற மூன்று குழந்தைகளும் தூங்காமல் ஆந்தை போல் விழித்திருந்தார்கள், ஏனென்றால் அவர்களின் அம்மா ஜெனிபர், கிருஸ்துமஸ் தாத்தா இரண்டு மான்களோடு பெரிய பரிசு வண்டியில் பன்னிரண்டு மணிக்கு வந்து நீங்க கேட்ட பரிசுகளை தருவார் என்று கூறினார்.

அதைக் கேட்டதிலிருந்து மூன்று குழந்தைகளும் என்ன பரிசு கேட்கலாம் என்று பட்டியலிட்டார்கள். மேரி தனக்கு ஒரு பார்பி டால் வேண்டும் என்றும் ஜான் தனக்கு ஒரு ரிமோட் கார் வேண்டும் என்றும் ஜார்ஜ் தனக்கு ஒரு ரிமோட் ஹெலிகாப்டர் வேண்டும் என்றும் ஒரு சின்ன காகிதத்தில் எழுதிவைத்து காத்திருந்தார்கள்.

நேரமுள் பத்தை தொட அம்மா ஜெனிபர் ஒவ்வொருவருக்கும் மூன்று தோசைகளைக் கொண்டு வந்து அனைவரும் சாப்பிடுங்கள் என்றாள். உடனே ஜான், எனக்கு தோசைவேண்டாம் இட்லி தான் வேண்டும் என்றான். அதற்கு ஜெனிபர், நாளைக்கு இட்லி ஊத்தித் தருகிறேன், இப்போது இதை சாப்பிட்டு வா பா ஜான் என்றாள். ஜானும் சரி என்கிறான். மூன்று குழந்தைகளும் தோசையை உண்டு

முடிக்கிறார்கள். நேரமுள் பதினொன்னை தொட மூன்று குழந்தைகளும் தூங்கிவிட்டார்கள்.

நேரமுள்ளும் நிமிடமுள்ளும் ஒன்றை ஒன்று தொட, **“ஜிங்கிள் பெல் ஜிங்கிள் பெல்”** என்ற பாடலோடு மணி ஓசை கேட்டது உடனே ஜார்ஜ் மட்டும் எழுந்தான், கிறிஸ்துமஸ் தாத்தா பெரிய பரிசு பைகளோடு அவர்கள் வீட்டிற்குள் வந்தார் ஜார்ஜ் அவரை பார்த்த உடனே தன் அண்ணா ஜானையும் மற்றும் தன் அக்கா மேரியையும்

எழுப்பினான், இருவரும் எழுந்தார்கள் பின் கிறிஸ்துமஸ் தாத்தாவை பார்த்தவுடன் மூவரும் அவரை கட்டிப்பிடித்துக் கொண்டார்கள் பின் அவர் கிறிஸ்மஸ் என்று கூறி உங்களுக்கு என்ன பரிசு வேண்டும் என்று கேட்டார், உடனே ஜார்ஜ் பரிசு பட்டியலை எடுத்து நீட்ட மூவருக்கும் அவர்கள் கேட்ட பரிசை கிறிஸ்துமஸ் தாத்தா தந்தார் பின் அவர் மேரி கிறிஸ்மஸ் என்று கூறியவாறு வீட்டை விட்டு மின்னல் ஒளிபோல் மறைந்தார்.



**வி. ஹரிஷ்ராஜ்,**
முதுகலை முதலாமாண்டு.

-----------------------------------------------

## புகை வண்டியா? புதையல் வண்டியா?

**(தொடர்கதை)**

**யாதுமாகி இதழின் நவம்பர் மாத இதழில் வெளியான கதையின் தொடர்ச்சி...**

நானும் ஐந்தாவது நடைமேடையில் இருந்து புகைவண்டியில் வேகமாக ஏறுவதற்கு விரைந்து நடந்தபோது சில சாரல்கள் மேலே தூவுவதைக் கூட தெரியாத நிலையில் வேக வேகமாக வலது காலை புகை வண்டியின் மூன்றாவது படியில் வைத்தேன். புகைவண்டி ஒலியின் சத்தம் மீண்டும் ஒலித்துவிட்டு சற்று வேகமாக நகரத் தொடங்கியது அதே நேரத்தில் மறுபடியும் எனது மற்றொரு காலை உள்ள வைத்துவிட்டு பாதி உடம்பு உள்ளேயும் மீதி உடம்பு மற்றும் அணிந்திருந்த பை வெளியேயும் இருக்கும் நிலையில் ஒருவர் "தம்பி கொஞ்சம் சீக்கிரமா உள்ள வாங்க" என்ற சத்தம் கேட்டதும் யார் என்று பார்க்கும் பொழுது ஆள் தெரியவில்லை.

அப்பொழுது இருக்கும் கூட்டத்தை நினைத்துக் கொண்டே உள்ளே சென்றேன். அது என்ன தெரியுமா பெரிய பெரிய மலைகளுக்கு நடுவில் சிறு சிறு விரிசல் நிலையில் தோன்றியிருக்கும். அதற்குள் ஒரு சிறிய எறும்பு கூட்டம் எப்படி நகர்ந்து அதனுடன் இடத்தை தேடி போகுமோ அதைப்போல நானும் மெல்ல மெல்ல என்னிடம் எது என்று தேடிக்கொண்டே உள்ளே சென்றேன் அப்பொழுது உள்ளே போவதற்கு இடம் இல்லை சற்று எனக்கு வலது புறத்தை திரும்பிப் பார்த்தால்

இரண்டு கழிப்பறைக்கும் இடையில் ஓரிருவர் நிற்கும் அளவிற்கு தான் இடமிருந்தது சரி இங்கே இருப்போம் என்று உள்ளே நுழைந்தேன். அப்பொழுது நான் நிற்கும் இடத்தில் கீழ் ஒரு வட மாநிலத்தவர் அவர் கொண்டு வந்த பையை கீழே போட்டு அதன் மேல் ஏறி அமர்ந்திருந்தார் நானும் சிரித்துக்கொண்டே வேகமாக அவரிடம் சென்று ஒரு ஓரத்தில் நின்று கொண்டே இருந்தேன்.

இப்பொழுதுதான் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. எனக்குள் ஒரு சிறிய மாற்றம் இப்படி என்ற ஒரு செய்தியை கேட்டுமில்லை பார்த்ததுமில்லை அப்படி ஒரு சம்பவம் நடந்தது ஒரு வயதான முதியவர் வந்தார். அவருக்குப் பின் மற்றொரு வயதான ஒருவரும் வந்தார். இருவரும் வரும் வழியில் எறும்பு நிற்பதற்கு கூட இடமில்லை அந்த நிலையில் அடித்துப் பிடித்து வந்தார்கள். வந்த பொழுது கீழே ஒருவர் ஒக்காந்து இரண்டு புரோட்டாக்களை பிச்சு போட்டு குழம்பை சொதம்ப சொதம்ப ஊத்தி ஒரு வாய் எடுத்து வாயில் வைத்தார்.

அப்பொழுது ஒரு முதியவர் வரும் இடத்தில் கீழே பார்க்காமல் காலை வைத்து விடவே உட்கார்ந்திருக்கும் அவர் மேல் பட்டுவிட வாய்க்கு கிடைத்த வார்த்தை எல்லாம் திட்டிக் கொண்டே சாப்பிடா திட்டு வாங்கிய அந்த முதியவர் எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் வந்த வேலை முக்கியம் என்று கழிப்பறைக்கு சென்று விட்டார்.

சிறிது நேரத்திலேயே கழிப்பறையில் இருந்து வந்த முதியவர் வரும் பொழுது வாய்க்கு கிடைத்த வார்த்தை எல்லாம் கட்டிக்கொண்டே வெளிவந்தார். நானும் எனக்கு எதிர்ப்புறத்தில் இருக்கும் அனைத்து மக்களும் பார்த்தார்கள். இருந்த மக்களும் அவரை நோக்கி பார்த்தார்கள்.

அப்பொழுது கீழே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் சட்ட கூட செய்யாம புரோட்டாவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

மறுபடியும் அவர் இன்னும் அருகில் வந்து தலையில் சொத்து என்று அடியே வைத்து விட்டு 'டேய் மானங்கெட்ட மாப்பிள ஏண்டா இந்த வேலை, இப்பதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மதுரையில புரோட்டா வேணும் கேட்ட வாங்கி கொடுத்தேன்'.

சாப்பிட்டா இப்ப மறுபடியும் இரவுக்கு வாங்கி வச்ச புரோட்டாவ சாப்பிடுறியாடா இதுக்கு முன்னால டாஸ்மாக்ல சில பாட்டில் பாட்டிலா வாங்கி குடிச்சியா டா திட்ட திட்ட அவர் சாப்பிட சாப்பிட அப்படியே பின் சாய்ந்தார்.

எனக்கு ஒரே பதட்டம் ஆயிற்று திட்டிக் கொண்டு இந்த வயதானவர் அருகில் சென்று அங்கிருந்த தண்ணீர் எடுத்து அவன் மேல் தெளித்தார். மது போதையில் மயங்கி கிடந்த அவன் எழுந்திருக்காமல் வாய்க்கு தோன்றியபடி எல்லாம் மூணு மூணு தான் அவன் அங்கு கிடந்த உணவு எடுத்துக்கொண்டு சாப்பிட்ட மீதியை எடுத்து அருகில் இருந்தால் குப்பை தொட்டியில் போட்டுவிட்டு உள்ளே சென்று விட்டார் அந்த முதியவர்.

இந்த நிகழ்வுகளைப் பார்த்ததுக்கு பிறகு எப்படித்தான் இப்படி வாழ்றாங்களோ இந்த மக்கள் எல்லாம் என்று நினைத்தும் அவர் குடும்பங்களை நினைத்துக் கொண்டிருந்தேன். எனக்கு அருகில் இருந்த சிலர் தெரிந்தவர்கள் போல அவர்களும் அவனைப் பற்றியும் குடும்பத்தின் நிலையை பற்றியும் பேசிக் கொண்டிருக்க ஒரு இரண்டு வயதான பாட்டி இருவர் வந்தார்கள் கீழே விழுந்து கிடப்பவனை பார்த்து அச்சச்சோ யாரு பெத்த பிள்ளையோ என்று சொல்லிக் கொண்டே ஆளுக்கு ஒரு கழிப்பறைக்குள் நுழைந்து விட்டார்கள்.

மது போதையில் கன்னா பின்னா என்று விழுந்து கிடந்த அவன் சற்று என்னை நோக்கி காலை நீட்டி நான் பொழுது கழிப்பறையில் இருந்த வந்த அந்த பாட்டி தெரியாத்தனமா அவனின் காலை மிதித்து விட அவன் வலி தாங்காமல் டமால் என்று எழுந்து கொண்டு அந்தப் பாட்டியை பார்த்து 'வந்தா வந்த வேலைய பாத்துட்டு போக முடியாதோ நான் தான்' படுத்து இருக்கேன் தெரியாதா உனக்கு உன் கண்ணு எங்க வச்சிக்கிடு போவியோ நான் நான் தான் படுத்து தூங்கிட்டு இருக்கேன் தெரியாதா உமக்கு என்ற திட்டிக் கொண்டு மறுபடியும் பின்புறமாக சாய்ந்து விட அந்தப் பாட்டியும் மற்றொரு கழிப்பறையிலிருந்து வந்த பார்ட்டியும் உள்ளே சென்று விட்டார்கள்.

அப்பொழுதுதான் நான் எனது கால் வலிக்கிறது என்று காலை திருப்பி வைத்தேன். மறுபடியும் அங்கு படுத்திருந்தவன் காலை நான் மிதித்து விட்டு மறுபடியும் 'எவண்டா என் காலை மறுபடியும் மிதிச்சது' வலிக்குதுன்னு தூங்கிட்டு இருக்க தெரியாதா மனுஷனுக்கு. மனுஷன் ஒரு நிமிஷம் கூட தூங்க விட மாட்டேங்களாடா ஏன்டா உங்க வீட்ல தான் அவ்வளவு இடம்

இருக்கு எனக்கு இந்த இடத்தில் கூட தூங்க கூடாதா டா என்று திட்டிட்டு கொண்டே சுற்றிமுற்றி பார்த்தான். அப்பொழுது நான் வேகமாக காலை எடுத்து வேறு இடத்தில் வைத்து விட்டேன்.

மது போதையால் காலை மிதித்தவர் எல்லாத்தையும் திட்டியதைப் பார்த்த ஒருவர் மது அருந்திவிட்டு படுத்து இருக்கும் அவர் அருகில் நின்று இருக்கும் ஒருவருக்கு நிற்பதற்கே இடமில்லை. அதனை பார்த்த மது போதையில் இருப்பவர் நின்றிருக்கும் அவரின் காலை தேய்த்து 'தம்பி என்னப்பா இப்படி நின்னுட்டு இருக்க நல்லா ஒழுக்கமா நில்லுப்பா' என்று சொல்லி விட்டு சற்று பின் நகர்ந்து இடம் கொடுத்தார் அவரும் சற்று நல்ல முறையில் நின்று விட்டார் இந்த செய்தி எல்லாம் பார்த்ததும் இப்படியும் எல்லாம் நடக்கும் என்று நான் நினைக்கவில்லை ஆனாலும் நடக்கிறது ஏன் என்று தெரியுமா இறைவன் நாடிட்டான் இப்படி நடக்கிறது என்று எண்ணிக்கொண்டு எனக்குள் ஒரு சிந்தனை ஓட தொடங்கியது.

எப்பொழுது கிறிஸ்துமஸ் பண்டிகை வரும் அடுத்த வருடம் எப்பொழுது பிறக்கும் என்று நினைத்துப் பார்த்தேன் ஏன் என்று தெரியுமா ஒவ்வொரு கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு எனது நெருங்கிய நண்பர்கள் ஒருவரான ரிச்சர்ட் என்பவர் வருடம் வருடம் எனக்கு கேக் வாங்கிக் கொண்டு வந்து தருவார். இதிலேயே ஒரு நிகழ்ச்சி நினைவில் இருக்கிறது எனக்கு மற்றும் அவரின் இன்னும் சில நண்பர்களுக்காக கேக் வாங்க சென்றோம் அப்பொழுதும் இது போன்ற ஒரு நிகழ்வு தான் நடந்தது. ஒருவர் வண்டியில் மது போதை அறிந்து கொண்டு இரண்டு மூன்று நபர்களை ஏற்றிக்கொண்டு மிகவும் வேகமாக வந்து சாலை பிரிப்பதற்கு நடுவில் வைத்திருந்த சுவற்றில் 'டம்' என்று மோதினார். அப்பொழுது அவரின் முன் இருந்த சக்கரம் வளைந்து விட்டது. அவருக்குப் பின் ஒரு காவலாளி வண்டி ஓட்டிக்கொண்டு வந்தார் அவர் வண்டியை நிறுத்திவிட்டு 'என்ன ஆயிற்று' எனக் கேட்க வண்டி ஓட்டி கொண்டு வந்தவர் வாய்க்கு வந்த வார்த்தை எல்லாம் சொல்லி ஒன்றுமில்லை

ஒன்றுமில்லை என்று சொல்ல அந்தக் காவலாளி அருகில் இருந்த மக்களை என்னப்பா என்ன ஆச்சு ஐயா என்ன ஆச்சு தம்பிகளா என்ன ஆச்சு என்று கேட்டார். கூட்டத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிறுவன் "சார் இவங்க வந்துட்டு இருந்தாங்களா வேகமா வந்து இந்த சுவற்றிலா டம்முனு மோதி விட்டாங்க சார்" யா யா என்னய்யா பார்த்து வர முடியாதா என்னய்யா தண்ணி போட்டா இந்த உலகத்தை மறந்து விடுவியா என்று சொல்லிக் கொண்டு

மற்றொரு காவலாளிக்கு அழைத்தார் அந்தக் கூட்டத்தில் இருந்தா ஒருவர் அழைத்து தம்பி நீ முன்னாடி பிடியா இன்னொரு காவலாளியும் இவரும் சேர்ந்து சக்கரத்தை பிடித்துக் கொண்டு ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு இங்கிருந்து கூட்டத்தை கலைத்துவிட்டு பின் வந்த வாகனத்தை எல்லாம் போங்க போங்க என்று சொல்லிவிட்டு தம்பி யார்யா இந்த வண்டி என்று கேட்டார் அப்பொழுது கோவம் அடைந்தவர் என்னையா இந்த வண்டி திருட்டு வண்டியா எதுவும் சொல்ல மாட்டேங்கறீங்க அருகில் இருந்த மற்றோர் காவலாளிடம் சொல்லி ஏய்யா போய் இந்த வண்டியோட சேஸ் நம்பரை பாருயா என்றார் அவரும் வேகமாக சென்று சேஸ் நம்பரை பார்த்தால் நம்பர் இல்லை அளிக்கப்பட்ட நிலையில் இருந்தது அதைக் கேட்ட அவர் யோவ் எனக்கு அப்பவே தெரியும் நீங்க கண்ணு முன்னு தெரியாம வரும்போது எங்கிருந்து வண்டி திருடிட்டு வந்தேங்க, நீங்க வாங்கய்யா காவல் நிலையத்துக்கு.

தொடரும்...



உ. பாபர் முகமது
இஸ்மாயில் காஜா ,
முதுகலை இரண்டாமாண்டு.

---

**யாதுமாகியின் வாசக அன்பர்களுக்கு இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்**




## திரை விமர்சனம்




மனிதனுக்காக கடவுள் உருவாக்கித் தந்த அற்புத பரிசு "கலை". அதை வைத்து மனிதன் கடவுளையே உருவாக்கினான். சாத்தானையும் தான் !

இன்று நாம் பார்க்க போகிற திரைப்படம் - வின்சி டா. பெங்காலி மொழியில் 2019 ம் ஆண்டு வெளியான ஒரு சிறந்த திரைப்படம்.

புகழ் பெற்ற ஓவியர் லியோர்னடோ டா வின்சி மற்ற ஓவியர்களில் இருந்து வேறுபட்ட சிறப்பான கலைஞர். ஏனெனில் அவர் தீட்டும் ஓவியங்களில் மனித உணர்ச்சியின் சிறு சிறு புள்ளிகள் கூட கூர்ந்து கவனித்து ஓவியம் தீட்டி இருப்பார். அவரின் மேல் அதீத ஈர்ப்பு கொண்டு, தன் பெயரை வின்சி டா என்று மாற்றிக் கொண்டு, சினிமாவில் ஒப்பனை கலைஞராக இருக்கும் கதையின் நாயகன், மிக துல்லியமாக ஒப்பனை செய்வதில் கை தேர்ந்தவன்.

மறு பக்கம், சிறு வயதில் இருந்தே சட்ட புத்தகங்களை கரைத்து குடித்து, அதை பயன்படுத்தி கை தேர்ந்த ஒரு குற்றவாளியாக வளர்ந்த ஒருவன்.

அவன், நாயகனையும் அவனுடைய கலைத்திறமையையும் பயன்படுத்திக்கொண்டு, எவ்வாறு தவறுகள் செய்கிறான். அது எந்த இறுதி வரைக்கும் போகிறது என்று விறுவிறுப்பாக கூறுவது இயக்குனரின் திறமை.

கலையை வைத்து தவறுகள் செய்து, அதே கலையை வைத்து அதை சரி செய்வது என்று பரபரப்புக்கு பஞ்சம் இல்லாமல் நகரும் திரைக்கதை.

மலையாள மொழி திரைப்படைப்புகளைப் போலவே எதார்த்தமாகவும், அழுத்தமாகவும் கதை சொல்லக்கூடிய தன்மை வாய்ந்தது வங்காள திரைப்படங்கள்.

அதிகம் தமிழ், கொரியன் படங்களை ரீமேக் செய்யும் வங்காள சினிமாவில், இப்படி பட்ட சில திரைப்படங்கள் முத்துக்கள் தான் !



லா. முகமது யூசுப்,
முதுகலை இரண்டாமாண்டு.

---------------------------------------------




கிறிஸதுமஸ் என்றாலே குதூகலம் , பிரமிப்பு , ஆசை , ஆர்வம், ஆனந்தம், என அனைவர் உள்ளத்திலும் மகிழ்ச்சி பொங்கும்...

கிறிஸ்துமஸ் தாத்தா வந்து நாம் கேட்ட பரிசை கொடுப்பார் என்பது பெரும்பான்மையான குழந்தைகளின் நம்பிக்கையான எதிர்பார்ப்பு... அல்லது கற்பனையான ஆசை... இது மேலை நாடுகளில் பரவலாகக் காணப்படுகிறது... இதனை மையமாகக் கொண்டு நவம்பர் 22, 2023 ல் வெளியான ஒரு சாகச, நகைச்சுவை திரைப்படம் தான் *the naughty nine..*

கதை:

கிறிஸ்துமஸ் தினத்தில் தாங்கள் கேட்டவற்றை எல்லாம் கிறிஸ்துமஸ் தாத்தா தருவார் என குழந்தைகள் காத்திருந்தனர்..
ஆனால் *naughty list* என்ற ஒரு பட்டியலில் சில குழந்தைகள் சேர்க்கப்பட்டு , அதில் உள்ளவர்கள் தவிர மற்ற அனைவருக்கும் பரிசு கிடைத்தது.
இந்த லிஸ்டில் சேட்டை செய்யும் குழந்தைகள் பெயர் சேர்க்கப்பட்டிருந்தது..

இதனை அறியா குழந்தைகள் பரிசை எதிர்ப்பார்த்து ஏமாற்றம் அடைந்தனர்.. லூயிஸ் என்ற சிறுவனின் உதவியுடன் கிறிஸ்துமஸ் தாத்தா வீட்டிற்க்கு சென்று திருடலாம் என்று திட்டம் தீட்டினர்.இதற்காக தங்களைப்போல் இந்த லிஸ்டில் பெயர் உள்ள குழந்தைகள் ஒன்றாக சேர்ந்து கிறிஸ்துமஸ் தாத்தா வீட்டிற்க்கு திருட சென்றனர்...

பலவித சவால்களுக்கு பின் பரிசை திருடிக்கொண்டு விமானத்தில் ஏறும் சமயம் ஆன்டி என்ற சிறுவன் விமானத்தில் ஏறாமல் அங்கேயே மாட்டிக்கொண்டான்.

கிறிஸ்துமஸ் தாத்தாவிடம் கொண்டு செல்லப்பட்டான். கிறிஸ்துமஸ் தாத்தா கையால் ஒரு சொடக்கு போட்டார். பின் அவன் பெயரும், அவன் நண்பர்கள் பெயரும் தவிர மற்ற அனைவர் பெயரும் அந்த லிஸ்டில் இருந்து நீக்கப்பட்டது. நாங்கள் செய்தது தவறுதான். எங்களை மன்னித்து விடுங்கள் என்றான். திருடிய பொருளில் ஒன்று மட்டும் இல்லாமல் இருந்தது..அதை அவன் அக்கா எடுத்திருந்தாள்..

உடனே மீண்டும் ஒரு சொடக்கு போட்டார்.. அவன் பெயரும், அவன் அக்கா பெயரும் மட்டும் லிஸ்டில் இருந்தது..

எல்லா தவறும் என்னுடையதுதான் என் அக்கா ரொம்ப நல்லவள், என்று அவன் கூறும்போது, விமானத்தில் சென்ற அவன் நண்பர்கள் அவனுக்காக மீண்டும் வந்தனர்.. எல்லாரும் கிறிஸ்துமஸ் தாத்தாவிடம் வேண்டி கேட்கவே, அனைவரின் பெயரும் அந்த லிஸ்டில் இருந்து நீக்கப்பட்டது...

கடைசியில், இந்த லிஸ்டில் பெயர் வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்று அனைவரும் கேட்டனர்..

அதற்கு கிறிஸ்துமஸ் தாத்தா, "நல்லப்பிள்ளைகளாக இருக்க வேண்டும்... பெரியோர்களை மதிக்க வேண்டும்...தவறான விஷயங்களில் ஈடுபடக்கூடாது.. மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் வாழ வேண்டும்"...
இதை செய்தாலே போதும்... உங்கள் பெயர் *naughty list* ல் வராது.. என்று கூறினார்..
இவ்வாறாக இக்கதை கற்பனையான சாகச நகைச்சுவை திரைப்படமாக அமைந்துள்ளது...

விமர்சனம்:

குழந்தைகளுக்கு பிடித்தமான, சுவாரஸ்யமான காட்சிகள் இக்கதையில் நிரம்பியுள்ளது.... இத்திரைப்படத்தில் நடித்த அனைத்து குழந்தைகளும் சிறப்பாக நடித்திருந்தனர்.... குழந்தைகளின் போராட்ட குணம், தவறை உணர்ந்து,திருத்திக்கொள்ளும் பண்பு, ஆகியவை இக்கதையில் மிளிர்கிறது...

அனைவரும் நட்புக் கொண்டு ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளும் மனப்பாங்கு, நண்பனுக்காக கடையில் மீண்டும் கிறிஸ்துமஸ் தாத்தா வீட்டிற்க்கு வந்த காட்சி, நட்பின் சிறப்பை புலப்படுத்துகிறது...



ஷா. முஹம்மது அர்ஷத்,
முதுகலை இரண்டாமாண்டு.

# சித்திரம் பேசுதடி





நா.ஆஷிகா பேகம்,

இளங்கலை இரண்டாமாண்டு.



செ.ராகவி,

இளங்கலை முதலாமாண்டு.



த.மோகன தாரணி,

இளங்கலை இரண்டாமாண்டு.



மு. அஜ்முனிஷா,

இளங்கலை இரண்டாமாண்டு.



28.12.2023 - உமறுப்புலவர் தமிழ்ப்பேரவை தொடக்கவிழாவில் திரைப்படப் பாடலாசிரியர் **கவிஞர் யுகபாரதியுடன்** தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்